கோவிட்-19 தடுப்பூசி

# உண்மைகளைப் பெறுக.

## கூட்டி மருந்தூசிகள்

இப்போது கிடைக்கப் பெறும் வயதினர் 5+

### கோவிட்-19 தடுப்பூசிகள் பலனுள்ளவை

கோவிட்-19 தடுப்பூசிகள் மிகப் பலனுள்ளவை. நீர் முழுமையாகத் தடுப்பூசி பெற்றவராயின்,உமக்கு கோவிட்-19 தொற்றி அன்புக்குரியோருக்குப் பரவுவது அசாத்தியமானது. உமக்குத் தொற்று ஏற்பட்டாலும், தடுப்பூசி உமக்கு ஆபத்தானவாறு சுகவீனம் ஏற்படாமல் தடுக்கிறது.

### கூட்டிகள் பாதுகாப்பானவை

கோவிட்-19 கூட்டிகள் பல நூறு மில்லியன் பேருக்குப் பாதுகாப்பானவையென எண்பிக்கப்பட்டுள்ள மூலத் தடுப்பூசிகளைப் போல் அதே ஆக்கக்கூறுகளைக் கொண்டவை. மிதமான பக்க விளைவுகள் சாதாரணமானவை. கடுமையான பக்க விளைவுகள் மிக அரிதானவை.



### கூட்டிகள் உம்மைப் பாதுகாப்பாக இருக்க உதவுகின்றன

கூட்டிகள் என்பவை நீர் கோவிட்-19 இற்கு எதிராகப் பாதுகாப்பாக இருக்க முடிவதற்காக உமக்கு முழுமையாகத் தடுப்பூசி ஏற்றப்பட்டுச் சில மாதங்களுக்குப் பிறகு உமக்கு வழங்கப்படும் தடுப்பூசிகளாகும்.

கூட்டிகள் பல தடுப்பூசிகளுக்குப் பொதுவானவை. உதாரணமாக,ஏற்புவலித் தடுப்பூசிகள் பெரியவர்களுக்கு 10 ஆண்டுகளுக்கு ஒரு முறை தேவைப்படுகின்றன.

சில தடுப்பூசிகளினாலான ஒருவரின் பாதுகாப்பு காலப் போக்கில் குறைவடைவதாகவும் அவர்களைப் பாதுகாப்பாக வைத்திருக்க ஒரு கூட்டி உதவுவதாகவும் விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளனர். கோவிட்-19 கூட்டி அங்ஙனமே செயற்படுகிறது.

NRC-RIM
National Resource Center for Refugees, Immigrants, and Migrants

இன்னும் தகவல்களுக்கு: cdc.gov/coronavirus

## யார் ஒரு கூட்டியைப் பெறலாம்

கூட்டிகள் ஒவ்வொருவருக்கும் மேலதிகப் பாதுகாப்பை வழங்குகின்றன, ஆனால் சுகாதார நிலைமைகள், தொழில்கள், அல்லது வாழ்க்கை நிலைமைகளுள்ள ஆட்களுக்கு, அஃதாவது கோவிட்-19 தொற்றும் அல்லது கடுமையாகச் சுகவீனமுறும் உயர் இடர்ப்பாடுள்ளோருக்கு அவை விசேடமாக முக்கியமானவை.

உமது குடிவரவு நிலை அல்லது உம்மிடம் சுகாதாரக் காப்புறுதி அல்லது ஒரு அடையாள அட்டை இருக்கிறதா என்பது யாதாக இருப்பினும், கூட்டிகள் யாவருக்கும் இலவசம்.



## இன்னும் பாதுகாப்பைப் பெறுக

உங்களது குடும்பத்தையும் உங்களது சமூகத்தையும் உங்களையும் பாதுகாக்க ஆகச் சிறந்த வழி முழுமையாகத் தடுப்பூசி பெற்றிருப்பதாகும். கூட்டிகள் இன்னும் அதிகப் பாதுகாப்பை வழங்குகின்றன. யாவரையும் பாதுகாப்பாக வைத்திருக்க ஒரு முகமூடியை அணிவதையும் சமூக இடைவெளியைப் பழகுவதையும் நீர் நோயுற்றுள்ள போது வீட்டிலிருப்பதையும் தொடர்க.

கூட்டிகளைப் பற்றி உம்மிடம் கேள்விகள் இருந்தால் உமது மருத்துவரையோ மருந்தாளரையோ மற்றொரு சுகாதார நிபுணரையோ தொடர்பு கொள்க.

### உம்மைப் பாதுகாத்துக் கொள்க.
### உங்கள் சமூகத்தைப் பாதுகாருங்கள்.
### தடுப்பூசி பெறுக.

NRC-RIM
National Resource Center for Refugees, Immigrants, and Migrants

இன்னும் தகவல்களுக்கு: cdc.gov/coronavirus